**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்**

| | | | |
|---|---|---|---|
| 2023-ம் ஆண்டு ஜீலை மாதம் 10ம் நாள் திங்கள்கிழமை வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1869ம் ஆண்டு சட்ட எண் 44வது பிரிவு 6(1)ன் பிரிவின்படி இளநிலை உதவியாளர் திரு.சிவா என்பவரால் உறுதி பிரமாணம் செய்யப்படுகிறது. | | | |
| பெயர்: | முருகேசன் | தொழில் : | |
| த.பெ: | மலைச்சாமி | சமயம் : | |
| கிராமம்: | | சாதி : | |
| வட்டம்: | | வயது: | |

**10.7.2023 OS No. 32 /2021 வா.சா.1** முருகேசன்**ஆஜர்**
**சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

1. தாவா வழக்கு வீட்டிற்கும், வீட்டிற்கு முன் உள்ள காலியிடத்திற்கும் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்து என்பது 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். தாவா சொத்தில்தான் 1ம் பிரதிவாதியிடம் வாடகைக்கு குடியுள்ளேன் என்றால் சரிதான். குடியிருப்பது சம்மந்தமாக நானும், 1ம் பிரவாதியும் வாடகை ஒப்பந்தம் எழுதிக்கொண்டோம் என்றால் சரிதான். நானும், 1ம் பிரதிவாதியும் எழுதிக்கொடுத்த வாடகை ஒப்பந்த ஆவணத்தைதான் எனது தரப்பில் 1ம் ஆவணமாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

2. வாடகை ஒப்பந்தத்திற்கு முன் பணமாக ரூ.3500/- கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். மாத வாடகை எவ்வளவு கொடுத்து வருகிறேன் என்றால் ரூ.700/- கொடுத்துவருகிறேன். மாத வாடகை ரூ.700/-யை ஒவ்வொரு மாதமும் சரியாக கொடுத்துவருகிறேன் என்றால் சரிதான். மாத வாடகை ரூ.700/- வாங்கிவருதற்கு எனக்கு ரசீதுகொடுக்கிறா என்றால் அவர் நோட்டில் எழுதிவைத்துக்கொள்வார். 1ம் பிரதிவாதி வரவு வைத்ததற்கான நோட்டை என் தரப்பில் 2ம் ஆவணமாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

3. வாடகை ஒப்பந்தம் 11 மாதத்திற்கு எழுதப்பட்டுள்ளதில் அதற்கு பின்னிட்ட காலத்திற்கு எதாவது ஆவணம் வைத்துள்ளேனா என்றால் அந்த ஆவணத்தின் அடிப்படையில் இன்று வரை தொடர்ச்சியாக வாடகைக்கு குடியிருந்துவருகிறேன். குடியிருப்பது சம்மந்தமாக 1ம் பிரதிவாதி நாகராஜன் என்னை ஏதேனும் தொந்தரவு செய்துள்ளாரா என்றால் இல்லை. தாவா சொத்து சம்மந்தமாக நானும், ஜெகதீஸ்வரன் ஏதேனும் வாடகை ஒப்பந்தம் ஏற்படுத்தியுள்ளோமா என்றால் இல்லை. தாவா சொத்து வாடகை சம்மந்தமாக இது வரை என்னிடம் எதுவும் கேட்டதில்லை என்றால் சரிதான்.

4. ஒப்பந்தத்தின் படி 2.11.2015ல்தான் குடிவந்தேன் என்றால் சரிதான். எனக்கு முன்பு யார் வாடகைக்கு குடியிருந்தார்கள் என்ற விபரம் தெரியுமா என்றால் நாகராஜனின் சகோதரி குடியிருந்தார். தாவா சொத்து சம்மந்தமாக எதற்காக வழக்கு தாக்கல்

செய்துள்ளேன் என்றால் 2ம் பிரதிவாதி ஜெகதீஸ்வரன் பிரச்சனை செய்கிறார். எனவே வழக்கு தாக்கல் செய்துள்ளேன். இது தொடர்பாக காவல்துறையில் விசாரணை நடந்ததா என்றால் என்னை விசாரிக்கவில்லை. காவல்துறையில் ஏதேனும் விசாரணை நடந்ததா? இல்லையா? என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி நாகராஜன் உரிமையாளர் நான் வாடகைதாரராக குடியிருந்து வருகிறேன் என்றால் சரிதான். என்னை நாகராஜன் தொந்தரவு செய்யவில்லை என்றால் சரிதான்.

**(2,3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் ஒத்தி வைக்கப்படுகிறது.)**

Taken down by me in open court
read over/ interpreted to the witness
in Tamil and acknowledged by him,
her to be correct.

District Munsif Cum
Judicial Magistrate,
Thiruppuvanam.